இது போன்ற நிலச் சட்டங்கள் நாட்டில் வரும்போது ஆங்காங்கு இருக்கும் நிலப் பிரபுக்கள் சட்டத்தின் ஓட்டைகள் வழியாகப் புகுந்து கொண்டு சட்டத்தின் நோக்கத்தைத் தோற்கடிக்க முயற்சிப்பது என்பது சர்வசாதாரணமான ஒன்றாகும். அவற்றை எல்லாம் அரசாங்கம் கண்டு பிடித்து தக்க நடவடிக்கை எடுக்கும் என்ற உறுதி மொழியை அளித்து இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்

MR. CHAIRMAN: (THIRU S. KANDAPPAN): The question is—That the Tamil Nadu Land Reforms (Fixation and Ceiling on Land) Amendment Bill 1972 (L. A. Bill No. 7 of 1972) be taken into consideration".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

Clauses 2 and 3 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGAM: Sir I move—

" That the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill 1972 (L.A. Bill No. 7 of 1972) be passed ".

The motion was put and carried and the Bill was passed into law.

(7) அரசினர் தீர்மானம்,

பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நீர் வழங்கு—வடிகால் வாரிய (திருத்த) சட்டமுன் வடிவுக்கு முன்னால் தமிழ்நாடு 1972-ம் ஆண்டு, நிலச் சீர்திருத்த (நில வுடைமைக்கு உச்ச வரம்பு வரையறுத்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/72 எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

(5) **அறிவிப்புகள்**—தொடர்ச்சி.

(ஈ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நிலவுடைமைக்கு உச்ச வரம்பு வரையறுத்தில் இரண்டாம் சட்ட முன்வடிவு.